# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## கொள்கை 2023 - 2024

பெண்களை அதிகாரப்படுத்துவதற்கான தொலைநோக்கு திட்டங்களை உருவாக்குவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற சுயமரியாதை இயக்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 1989 ஆம் ஆண்டிலேயே பெண்களுக்கான சமமான சொத்துரிமை வழங்குவதை சட்டமாக்கப்பட்டதே இதற்கான ஒரு சிறந்த உதாரணம் எனலாம்.

1989 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் திரு.மு.கருணாநிதி அவர்களால் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம், பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான மற்றொரு முக்கிய படி நிலையாகும்.

தற்பொழுது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கிராம மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்கள் மற்றும் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றை முன்னெடுத்து செல்கிறது. இத்தகைய திட்டங்கள் ஏழைகளுக்கான நிறுவனங்களை உருவாக்குதல், சமுதாய மூலதனங்களை உருவாக்குதல் மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை உறுதி செய்தல் ஆகிய சமுதாயமே இயக்கும் வளர்ச்சி அணுகுமுறை எனும் கொள்கையில் வலுவாக வேரூன்றி உள்ளது.

## 2. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW)

தமிழ்நாடு அரசு, பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்ற ஒரு தனி அமைப்பை 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 9 அன்று தொடங்கியதன் மூலம் ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இந்நிறுவனம், இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பாகும்.

இந்நிறுவனம் தொடங்கியதிலிருந்து சமூக நலத் துறையின் கீழ் 2006 ஆம் ஆண்டு வரை செயல்பட்டு வந்தது. அடித்தட்டு மக்களை விரைந்து சென்றடைவதற்கும், மகளிருக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஏதுவாக ஊராட்சி நிறுவன அமைப்புகளுடன் ஒருங்கிணைத்து, ஜுலை 2006 ஆம் ஆண்டு முதல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

## சுய உதவிக் குழு இயக்கம் மற்றும் மகளிர் திட்டம்

### பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) திட்டம்

1980 ஆம் ஆண்டிற்கு முன்பு செயல்படுத்தப்பட்ட ஊரக வளர்ச்சி திட்டங்களில் மகளிர் இலக்கு மக்களாக சேர்க்கப்படவில்லை. அதன் பின்பு முதல் முறையாக ஊரகப் பகுதிகளில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்கு மகளிர் குழுக்கள் மூலமாக நிதி உதவிகள் வழங்கி அவர்களை முன்னேற்றுவதில் கவனம் செலுத்தப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (DeW) பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி (IFAD) திட்டத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் அரசு திட்டங்களில் மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மட்டுமல்லாமல் அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் கவனம் செலுத்தும் புதிய அணுகுமுறை உருவாக்கப்பட்டது.

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடனான மாற்று அணுகுமுறையின்படி ஜனநாயக, சமத்துவ, கூட்டு சமூக அமைப்பு போன்றவை சுய உதவிக் குழுக்கள் மூலம் உறுதி செய்யப்படுகிறது. முதலில் விவசாயம் மற்றும் நிலம் சார்ந்த திட்டமாக திட்டமிடப்பட்டது. பின்னர், இது அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் சுய உதவி குழுக்களை உருவாக்கி வளர்ப்பதன் மூலம் மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்கான இயக்கமாக உருவானது.

தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழு எனும் புதிய அணுகுமுறை துவங்கப்பட்டு, பின்னர் 1991-92 ஆம் ஆண்டில் இத்திட்டம் அப்போதைய சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. மேலும், 1992-93 ஆம் ஆண்டில் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

மேற்கண்ட இத்திட்டமானது, 31.12.1998 அன்று அதிகாரப்பூர்வமாக முடிவடைந்த போதிலும் இதன் மூலம் உருவான சுய உதவிக் குழு இயக்கத்தின் வாயிலாக வேளாண் நிலங்கள் மேம்படுத்தப்பட்டு வேளாண்மை பொருளாதாரம் உயர்ந்ததுடன் தமிழ்நாட்டில் மகளிரின் பொருளாதாரமும் மேம்பட்டது.

**மகளிர் திட்டம்**

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) திட்டத்தின் வெற்றியானது, மாநிலம் முழுவதும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள ஏழை மற்றும் மிக பின்தங்கிய மகளிரிடம் சென்றடைவதற்கு அடித்தளமிட்டது. முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் 1997 ம் ஆண்டு இத்திட்டமானது மாநிலம் முழுவதும், மாநில அரசின் திட்ட நிதியுதவியுடன் ''மகளிர் திட்டம்'' என்ற பெயரில் துவக்கப்பட்டது. இத்திட்டமானது படிப்படியாக அனைத்து மாவட்டங்களின் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது. முழுமையான நகர்பகுதியைக் கொண்ட சென்னை மாவட்டம், 2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் இறுதியாக இணைக்கப்பட்டது.

மகளிர் திட்டமானது, அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுடன் இணைந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் புதிய சுய உதவிக் குழுக்களை உருவாக்கி இவர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்குதல், சேமிப்புகளை உயர்த்துதல் மற்றும் வங்கி கடன்கள் பெறுதல் மூலம் சமூக பொருளாதார தடைகள் நீக்கப்பட்டு இதன் மூலம் இவர்கள் சமூகத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு சக்தியாக செயல்படுவார்கள்.

தமிழ்நாட்டில் சுய உதவிக் குழு இயக்கம் பத்தாண்டுகளுக்கு மேலாக வெற்றிகரமாக செயல்பட்டதின் அடிப்படையில் ஊரக வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு 1999 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு ஸ்வர்ணஜெயந்தி கிராம் ஸ்வரோஸ்கர் யோஜனா (SGSY) என்ற புதிய திட்டத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் வாழ்வாதார இயக்கங்கள்

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் வாழ்வாதார இயக்கங்கள்

ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் வறுமை ஒழிப்பினை முதன்மை நோக்கமாக கொண்டு சமூக பொருளாதார முன்னேற்றத்தை உறுதிபடுத்தும் நோக்கில் செயல்படுகின்றன. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது, மகளிருக்கான சமூக – பொருளாதார மற்றும் அரசியல் பங்களிப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் மகளிருக்கான பல்வேறு வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்தப்படுவதன் மூலம் இவை சாத்தியமாகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள்

1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)
2. தேசிய ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் (NRETP)
3. தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் பயிற்சித் திட்டம் (DDU - GKY)
4. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM)

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, ஊரகப்பகுதிகளில் ஏழைகளைக் கொண்டு வலுவான மற்றும் துடிப்பான மக்கள் அமைப்புகளுக்கான அடித்தளத்தை உருவாக்கும் பொருட்டு, வறுமை ஒழிப்பு திட்டங்களை செயல்படுத்தி இத்திட்டத்தின் மூலம் வாழ்வாதார முன்னெடுப்புகள், வங்கி கடன் இணைப்பு மற்றும் நிதி சார்ந்த பிற சேவைகளை பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு அக்குடும்பங்களின் வருமானம் உயர்த்தப்படுகிறது. தீன்தயாள் அந்தியோதயா யோஜனா- தேசிய ஊரக வாழ்வாதார இயக்கமானது (DAY-NRLM) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமாக ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி பகிர்வான 60:40 என்ற விகிதாச்சாரத்தில் மாநிலத்தின் அனைத்து வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

## தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் (NRETP)

தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் உலக வங்கி உதவியுடன் ஒன்றிய அரசால் வாழ்வாதாரம் மற்றும் தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கையை மேம்படுத்த 5 மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட 20 வட்டாரங்களில் முன்மாதிரியான முன்னோடி திட்டமாக சோதனையின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கமானது ஏழைகளை உள்ளடக்கிய பல நிலையிலான சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்குவதன் மூலம் இந்த அமைப்புகள் வலுப்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதாச்சார நிதி பங்களிப்புடன் 2019 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

## தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU-GKY)

தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (**DDU-GKY**) ஒன்றிய மற்றும் மாநில அரசு இடையே 60:40 என்ற நிதி பகிர்வு முறையை கொண்ட வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி திட்டமாகும். இத்திட்டமானது, கிராமப்புற வேலையற்ற

இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து NSQF சான்றிதழுடன் கூடிய குறைந்தபட்சம் 70% பணியமர்வு அளிக்கப்படுவதை உறுதி செய்கிறது.

**தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM)**

நகர்ப்புற ஏழைகளைக் கொண்டு வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி திறன் பயிற்சி வழங்குதல், நுகர்வு மற்றும் நிறுவனம் அமைக்க வட்டி மானியத்துடன் கூடிய கடன் இணைப்பு பெற வழிவகை செய்தல் வாயிலாக அவர்களின் வறுமை மற்றும் நலிவு நிலையை குறைப்பதே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதாச்சார நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)**

2012 ஆம் ஆண்டில், ஒன்றிய அரசின் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய நோக்கமானது, ஏழைக் குடும்பங்களுக்கு சுய வேலைவாய்ப்புகள் மற்றும் திறன் சார்ந்த வேலைவாய்ப்புகளை வழங்கி அத்துடன் வாழ்வாதார மேம்பாடு நடவடிக்கைகள், நிதி உதவிகள் வழங்குதல் மற்றும் பிற சேவைகளை அளிப்பதன் மூலம் வறுமையைக் குறைப்பதே ஆகும்.

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது வாழ்வாதார மேம்பாடு, நிதி உதவி மற்றும் பிற சேவைகளை வழங்குதல் மூலம் ஏழைகளின் குடும்ப வருமானத்தை அதிகரிப்பதே ஆகும். இவைகள் பின்வரும் செயல்பாடுகள் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்பு | திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகள் | கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு |
| நிதி உள்ளாக்கம் | வாழ்வாதார மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் | திறன் பயிற்சிகள் |

**சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு**

கடன் பெறும் உரிமையானது, எளிதாக கடன் பெறுதல், சரியான நேரத்தில் போதுமான அளவு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறுதல் ஆகியவற்றின் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்குவதன் மூலம் கிராமப்புற ஏழை மக்களிடையே நிதி உள்ளாக்கத்தை கொண்டு செல்வது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முக்கியமான பொறுப்புகளில் ஒன்றாகும்.

**உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் (FNHW)**

வளமான மற்றும் தரமான வாழ்க்கைக்கு முக்கிய தேவைகளான ஆரோக்கியம், சத்தான உணவு மற்றும் சுகாதாரம் போன்றவை உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதார (FNHW) திட்டத்தின் வாயிலாக வலியுறுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கியமான நோக்கங்கள் பின்வருமாறு:

1. நல்ல ஆரோக்கியம், நல்வாழ்வுக்கான உணவு மற்றும் ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துதல்.
2. கர்ப்பிணிப் பெண்கள், வளர் இளம் பெண்கள், குழந்தைகளுக்கான தேவை மற்றும் உரிமைகளை பெற வழிகாட்டுதல்கள் அளித்தல்.
3. உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதார செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக பழக்கவழக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்துதல்.

கீழ்கண்ட செயல்பாடுகள் இத்திட்டத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றன.

1. உணவுத் திருவிழா
2. ஊட்டச்சத்து நிறுவனங்கள்
3. வீட்டு ஊட்டச்சத்து தோட்டம்

2022-23 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்:

1. **மக்களை தேடி மருத்துவம்** (MTM)

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலமாக தொற்றா நோய்களை கண்டறிவதற்காக அதிக ஈடுபாட்டுடன் கூடிய சுய உதவிக் குழு உறுப்பினர்களை மகளிர் சுகாதார தன்னார்வலராக (WHV) நியமித்து மக்களைத் தேடி மருத்துவத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புரங்களில் முறையே 8,713 மற்றும் 2,256 மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் துணை சுகாதார மையங்களுடன் (HSC) இணைக்கப்பட்டு செயல்படுகின்றனர்.

மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் (WHV) தொற்றா நோய்களை கண்டறிந்து, அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல் நாள்பட்ட நோயாளிகளுக்கு மருந்துகளை வீடுகளுக்கே சென்று வழங்குகிறார்கள்.

2. **முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்** (CMBFS):

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து அரசு தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கான முதலமைச்சரின் காலை உணவு திட்டம் ஒரு முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களிலுள்ள அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கான இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் மகளிர் சுய உதவிக் குழுவினர் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆரோக்கியமான, தரமான காலை உணவு சுய உதவிக் குழு மகளிரால் தயாரிக்கப்படுகிறது. ஊராட்சி அளவிலான சிறப்புக் குழுவால் அடையாளம் காணப்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, காலை உணவை சமைப்பதற்கு சமையல் கலை நிபுணர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது. சமையல் கூடத்தின் பொறுப்பாளராக இருக்கும் சுய உதவிக் குழு சமையலர் தினமும் காலை உணவு சமைத்து, உணவு வழங்கப்பட்ட விவரங்களை கைபேசி செயலியில் பதிவேற்றுகிறார்கள்.

தற்போது இத்திட்டம் கிராமப்புறங்களில் உள்ள 16 மாவட்டங்களில், 963 பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது.

3. **ஊட்டச்சத்து மாதம் மற்றும் ஊட்டச்சத்து வார கொண்டாட்டம்**

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையுடன் ஒருங்கிணைந்து சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மார்ச் 2022 மற்றும் செப்டம்பர் 2022 ஆம் மாதங்களில் நடைபெற்ற போஷன் மா மற்றும் போஷன் பக்வாடா பிரச்சாரங்களில் பெருவாரியாக மக்கள் பங்கேற்று இரத்த சோகை, வளர்ச்சி குறைபாடு மற்றும் ஆராக்கியமான உணவின் முக்கியத்துவத்தை குறித்த குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளனர்.

4. **“நம்ம ஊரு சூப்பரு” விழிப்புணர்வு பிரச்சாரம்**

“நம்ம ஊரு சூப்பரு” விழிப்புணர்வு பிரச்சாரம் 2022 ஆகஸ்ட் 20 ஆம் தேதி முதல் அக்டோபர் 2 ஆம் தேதி வரை நடத்தப்பட்டு தூய்மையான மற்றும் பசுமையான கிராமங்களை உருவாக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**சர்வதேச சிறுதானிய ஆண்டு – 2023**

2023 ஆம் ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. நமது மாநிலம் சிறுதானிய சாகுபடியில் பெரும்பங்கு வகிக்கின்றது. சிறுதானியங்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதால் அவை ஊட்டச்சத்து நிறைந்த தானியங்கள் என உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, சிறுதானிய உற்பத்திக்கு புத்துயிர் அளிக்கும் விதமாக வேளாண்மைத் துறையுடன் இணைந்து உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிப்பது, சிறுதானிய உணவை உண்பதால் ஏற்படும் ஆரோக்கிய நன்மைகள் குறித்து நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சிறுதானிய மதிப்பு கூட்டு பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் புதிய சிறுதானிய பொருட்களை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டை ‘மகளிர் மற்றும் சிறுதானியம்’ என்ற தலைப்பில் கொண்டாடப்பட உள்ளது.

**மின்னணு வர்த்தகத்தை ஊக்கப்படுத்துதல்**

சந்தை பொருளாதாரமானது மின்னணு வர்த்தகத்தை நோக்கி பயணிக்கும் இக்கால கட்டத்தில், இணையதள வர்த்தகத்தின் மூலம் நுகர்வோரை நேரடியாக சென்றடையவும், சந்தைப்படுத்தும் வாய்ப்புகளை விரிவுபடுத்திடவும், சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்திடவும் ஏதுவாக ஒரு தனிப்பட்ட மின்னணு வர்த்தக இணையதளம் தொடங்கப்படும்.

**விருதுகள்**

**சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள்**

சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் 2006-07 ஆண்டு முதல் வழங்கப்பட்டு வந்த “மணிமேகலை விருதுகள்” பின்னர் நிறுத்தப்பட்டது. சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சிறப்பான செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் 2021-22 ஆம் ஆண்டு முதல் மணிமேகலை விருதுகள் மீண்டும்

வழங்கப்படுகிறது. அரசியல் மற்றும் சமூக – பொருளாதார மேம்பாட்டில் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் பங்களிப்பை அங்கீகரித்து பாராட்டும் வகையில் சுய உதவிக் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, வட்டார அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், நகர அளவிலான கூட்டமைப்பு மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிற்கு விருதுகள் வழங்கப்படுகிறது. மாவட்ட மற்றும் மாநில அளவில் சிறப்பாக செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு ரொக்க விருதுகள் மற்றும் சான்றுகள் வழங்கப்படுகிறது.

## தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம்

தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டத்தின் நோக்கமானது பல்வேறு நிலையிலான வேறுபட்ட செயல்பாடுகளை பல்வேறு நிலையிலான வேறுபட்ட செயல்பாடுகளை செயல்படுத்தவதாகும். வட்டார அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மதிப்புக்கூட்டு வளர்ச்சியை மேம்படுத்துதல், தனி நபர் தொழில் மற்றும் தொகுப்புத் தொழிலகங்களை பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாரா பிரிவின் கீழ் அமைத்தல், தொழில் திறன் மேம்பாடு மற்றும் நிதி சேவைகளுக்கான மாற்று திட்டத்தை விரிவுபடுத்துதல் மற்றும் சமூக மேம்பாட்டிற்கான முயற்சிகளை உருவாக்குவதே ஆகும். உலக வங்கியானது இந்த திட்டத்திற்காக ஒன்றிய அரசுக்கு நிதி உதவி வழங்குகிறது. இத்திட்டத்திற்கு ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் முறையே 60:40 என்ற விகிதத்தில் நிதிப்பகிர்வு வழங்குகிறது.

தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் 2019-20 ஆம் ஆண்டிலிருந்து திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு, சேலம் மற்றும் கடலூர் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது.

### தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU-GKY)

தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU-GKY) என்பது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளிடையே 60:40 என்ற நிதி பகிர்வு முறையை கொண்டு ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் உள்ள இளைஞர்களுக்கான திறன் பயிற்சி அளிக்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்ட செயலாக்க முகமைகள் மூலம் பல்வேறு திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு குறைந்தபட்சம் 70% பணியமர்வு அளிக்கப்படுவது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

## தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM)

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது, நகர்ப்புற ஏழைகளைக் கொண்டு சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி அவர்களின் வறுமை மற்றும் நலிவு நிலையை குறைப்பதும், இலாபகரமான சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலைவாய்ப்புகளை பெறுவதற்கான வழிவகை செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவது ஆகும். மேலும், நகர்ப்புற உறைவிடமற்றோருக்கு தேவையான உறைவிடத்தை ஏற்படுத்தித் தருதல் மற்றும் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதார சிக்கல்களுக்கு தீர்வுகாண கடன் இணைப்பு மற்றும் இதர சேவைகளை வழங்குவதை இவ்வியக்கம் முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM) தொடங்கப்பட்ட 2014-15 ஆம் ஆண்டு முதல், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வந்தது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் பல்வேறு வாழ்வாதாரம் சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதில் மிகுந்த அனுபவம் கொண்டுள்ளதால் இதனைக் கருத்தில் கொண்டு, மாநில அரசு அனைத்து வாழ்வாதார இயக்கங்களையும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்ற ஒரு குடையின் கீழ் கொண்டு வர முடிவு செய்து, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 2016-17 ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திட்டக்கூறுகள்**

1. **சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)**
    - சுய உதவிக்குழு அமைத்தல் மற்றும் சுழல்நிதி வழங்குதல்
    - பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் சுழல் நிதி வழங்குதல்
    - நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல்

    - **நகர்ப்புற வாழ்வாதார மையங்கள்**

    இம்மையங்கள் அனைத்து நகர வாசிகளுக்கு முறைசாரா துறைகளில் தேவையான சேவைகளை வழங்குவதற்கும், மேலும், நகர்ப்புற ஏழைகள் அவர்களது உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்துவதற்கும் தேவையான தகவல்கள் மற்றும் பயன்களைப் பெறுவதற்கும் அடித்தளமாக அமைவதுடன் ஓரிட வணிக மையமாகவும் (One – Stop Shop) செயல்படுகிறது.

2. **வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டம் (ESTP)**
3. **திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி** (CBT)
4. **சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP)**
    - தனிநபர் சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP -I):
    - குழு சுய வேலைவாய்ப்பு திட்டம் (SEP – G):
    - சுய வேலைவாய்ப்பு திட்டம் - வங்கி இணைப்பு (SEP-BL):

## தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் (TNRTP) @ வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2.0 (VKP)

**தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம்**

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு வறுமை ஒழிப்பு மற்றும் ஆற்றல் படுத்துதல் திட்டம் (TNEPRP), வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (1.0) என்றழைக்கப்பட்டது. மகளிர் திட்டம் செயல்படுத்தியதில் கற்று கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. மக்கள் பங்கேற்புடன் இலக்கு மக்களை கண்டறிதல் (RIP) முறையால் அடையாளம் காணப்பட்ட ஏழை எளிய மக்களுக்கான அழைப்புகளை உருவாக்கி ஏழை எளியோரை ஆற்றல் பெறச்செய்வதை நோக்கமாகக் கொண்டு "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" 2005-06 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த வெற்றிகரமான வழிமுறை மற்றும் அணுகுமுறையானது 2013 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் வட்டாரம் மற்றும் மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. இத்திட்ட நடவடிக்கைகளும் அதன் பாராட்டதக்க செயல்முறைகளும், வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு வெற்றிகரமான மாதிரியாக அங்கீகரிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டில் இத்திட்டம் நிறைவடைந்ததும், புதிய முயற்சிகளை முன்னெடுக்கவும், உயர்நிலை அமைப்புகளை உருவாக்கி அதன் மூலம் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கவும், நிதியுதவி வழங்கவும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

2021-22 ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (2.0) என்று அழைக்கப்படும் உலக வங்கி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம், மூன்றாம் தலைமுறை வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார அதிகாரம்

அளிக்கும் திட்டம் ஆகும். ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் வாழ்க்கையில் நிலையான வருமானத்தை ஏற்படுத்தவும், அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றவும் பெண்களை முன்னிலைப்படுத்திய நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன.

**திட்ட மேம்பாட்டு நோக்கங்கள்**

தமிழ்நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் ஊரகத் தொழில் முனைவுகளை உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

**முக்கிய கூறுகள்**

**இந்த திட்டம் பின்வரும் நான்கு முக்கிய கூறுகளை உள்ளடக்கியது:**

1. ஊரகத் தொழில் முனைவுக்கு ஏற்ற சூழல் மேம்பாடு
2. தொழில் முனைவுக்கான திட்ட நிதி வழங்குதல்
3. திறன் மற்றும் வேலைவாய்ப்புகள்
4. திட்ட மேலாண்மை